இருக்கிறார்கள். ஓராண்டுக் காலத்திலே மாண்புமிகு உறுப்பினருடைய என்னைக் கனவுகள் நிறைவேற்றித் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. அறிவிப்புகள்.

(அ) முதல் துணை மதிப்பீடுகள் 1991-92, மொழிதல். (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: 1991-92 ஆம் ஆண்டுக்கான முதல் துணை மதிப்பீடுகள் குறித்த அறிக்கையை பேரவையில் அளிப்பதற்கு ஆளுநர் அவர்கள் 1991 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 1 ஆம் நாள் செவ்வாய்க் கிழமையைக் குறித்துள்ளார்கள்.

3. கவன ஈர்ப்பு.

(அ) நாங்குநேரி தொகுதியில் உள்ள விஜயநாராயணபுர ஏரியின் மடைகள் சேதமடைந்துள்ளது குறித்து.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வைக் குறித்த கவன ஈர்ப்புகள். திரு. வெ. நடேசன் பால்ராஜ் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. வெ. நடேசன் பால்ராஜ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய நாங்குநேரி தொகுதியில் விஜயநாராயணபுர ஏரி என்று ஒரு ஏரி உள்ளது. அந்தப் பெரிய ஏரி மிகவும் சேதம் அடைந்திருக்கிறது.